பக்கங்கள் : நான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 22 வள்ளுவர் ஆண்டு 2038 பங்குனி 12 திங்கட்கிழமை (26.03.2007) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் : 119

# கட்டுநாயக்கா விமானப்படைத் தளம் மீது நள்ளிரவில் விடுதலைப் புலிகளின் இரண்டு விமானங்கள் தாக்குதல்!

பிந்திய செய்தி

## விமான நிலையம் மூடப்பட்டது; சேவைகள் வேறு நாடுகளுக்கு மாற்றம்

கொழும்பு, மார்ச் 26

கட்டுநாயக்காவில் உள்ள இலங்கை விமானப்படைத் தளத்தின் மீது நேற்று நள்ளிரவு விடுதலைப் புலிகளின் விமானங்கள் தாக்குதல்களை நடத்தின. இந்தச் சம்பவத்தின் போது 2 விமானப் படை வீரர்கள் பலியானார்கள். 17 பேர் காயமடைந்து நீர்கொழும்பு ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப் பட்டனர்.

விடுதலைப் புலிகளின் இலகு விமானம் ஒன்று விமானப் படைத்தளம் மீது வெடிபொருள்களைக் கொட்டியதாகவும், அதனால் இரண்டு தடவைகள் பெரும் குண்டு வெடிப்பு நடைபெற்றதாகவும் விமானப்படைப் பேச்சாளர் கப்டன் அஜந்த டி சில்வா தெரிவித்தார்.

இதேவேளை, விடுதலைப் புலிகளின் இரண்டு விமானங்கள் தாக்குதல்களை நடத்திவிட்டு பத்திரமாக வன்னிக்குத் திரும்பியதாக இராணுவப் பேச்சாளர் இ. இளந்திரையன் தெரிவித்தார்.

இலங்கை விமானப்படையின் கிபிர் மற்றும் மிக் - 27 ரக விமானங்களை இலக்கு வைத்து அவற்றின் தரிப்பு நிலையங்கள் மீதே தாக்குதல்கள் நடத்தப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார்.

தாக்குதலின்போது இரண்டு ஹெலிக்கொப்டர்கள் சேதமடைந்ததாக இன்று விடிகாலையில் கிடைத்த ஏஜென்ஸித் தகவல்கள் தெரிவித்தன.

சம்பவத்தைத் தொடர்ந்து (04ஆம் பக்கம் பார்க்க)

# போர் அகதிகளைப் பாதுகாப்பதற்கு ஐ.நா.வின் உதவி கோரப்படும்

## இந்திய அனுசரணையைப் பெறுவதற்கு தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு முயற்சி

கொழும்பு,மார்ச் 26

அரசாங்கம் வடக்கு - கிழக்கில் திட்டமிட்டு நடத்தும் இராணுவ நடவடிக்கைகளால் தமிழ்மக்கள் அகதிகளாகி வருகிறார்கள். அவர்களுக்குப் போதிய உயிர்ப் பாதுகாப்பு இல்லை. அதனை நீக்கி, அவர்களுக்குப் பாதுகாப்பு வழங்குமாறு ஐக்கிய நாடுகள் சபையிடம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக் கோரிக்கை வைக்க உள்ளது. அதற்கு ஆதரவு தந்து அனுசரணை வழங்குமாறு கூட்டமைப்பு எம்.பிக்கள் ஏற்கனவே இந்தியாவிடம் கேட்டுள்ளனர்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் நேற்றுமுன்தினம் சனிக்கிழமையன்று கொழும்பில் உள்ள இந்தியத்தூதுவர் அலோக் பிரசாத்தைச் சந்தித்துப் பேச்சு நடத்தினர்.

அப்போது - இலங்கை அரசாங்கம் சமாதான முயற்சி என்று வெளியே பேச்சுக்குக் கூறிக் கொண்டு, தனக்கென இராணுவ நிகழ்ச்சித் திட்டம் ஒன்றைச் செயற்படுத்தி வருகிறது.

அரசின் தமது அந்தத் திட்டத்தின் கீழ் வடக்கு - கிழக்கில் நடத்தும் தாக்குதல்களால் ஏற்கனவே ஒரு லட்சத்து 65 ஆயிரத்துக்கு மேற்பட்ட தமிழ்மக்கள் அகதிகளாகிவிட்டனர்.

அந்த அகதிகளின் உயிர்ப் பாதுகாப்பை உறுதி செய்வதற்கு அரசாங்கம் பயன்தரும் எந்த நடவடிக்கையையும் மேற்கொள்ளவில்லை.

அது மட்டுமன்றி அவர்களின் மறுவாழ்வை மேம்படுத்துவதற்கும் எந்த நடவடிக்கைகளையும் அரசு எடுக்கவில்லை.

தாம் கைப்பற்றிய பகுதிகளில் தமிழ் மக்களை பலவந்தமாக, பலாத்காரமாக, பயமுறுத்திக் குடியமர்த்தி வருகின்றனர்.

அந்த மக்களின் பாதுகாப்பு, அடிப்படைத் தேவைகள், மனிதாபிமான உதவிகள் எதையும் அரசு சர்வதேச நியமங்களுக்கு ஏற்பச் செய்யவில்லை.

ஆகையால் தமிழ் அகதிகள் (04ஆம் பக்கம் பார்க்க)

# கடும் ஷெல் மோதல் மன்னாரில் நீடிப்பு!

## பத்துப் படையினர் பலி; 91 பேர் காயம்! பொதுமக்கள் தொடர்ந்து இடம்பெயர்வு

மன்னார்,மார்ச் 26

மன்னார் பாதுகாப்பு முன்னரங்கில், விடுதலைப் புலிகளுக்கும் அரசுப் படைகளுக்கும் இடையே கடும் ஷெல் மோதல்கள் நேற்று மூன்றாவது நாளாக இடம்பெற்றிருக்கின்றன. நேற்று அதிகாலை முதல் இப்பகுதியில் ஷெல் மற்றும் பீரங்கித் தாக்குதல்கள் மாறி மாறி நடத்தப்பட்டன. இத்தாக்குதல்கள் காரணமாக மேலும் ஆயிரக்கணக்கான பொதுமக்கள் பாதுகாப்பான பகுதிகளை நோக்கி இடம்பெயர்ந்து கொண்டிருக்கின்றனர்.

மன்னார் மடு பிரதேசத்தில் கடந்த வியாழக்கிழமை ஆரம்பித்த ஷெல் மோதல்களில் இரண்டு தரப்புகளிலும் சேதங்கள் ஏற்பட்டிருக்கின்றன என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.

நேற்று ஞாயிற்றுக்கிழமை அதிகாலை மடு வீதியில் படை முகாம் ஒன்று புலிகளின் சரமாரியான ஷெல் தாக்குதல்களுக்கு இலக்கானதில் சிப்பாய் ஒருவர் கொல்லப்பட்டார் என்றும், 3 சிப்பாய்கள் காயமடைந்தனர் என்றும் பாதுகாப்பு அமைச்சுத் தெரிவித்துள்ளது.

மன்னார் வட்டகையில் இடம்பெறும் இந்த மோதல்களில் இது வரை விடுதலைப் புலிகள் தரப்பில் 49 உறுப்பினர்கள் கொல்லப்பட்டிருக்கின்றனர் என்று இராணுவத்தரப்பு கூறுகிறது. தங்களின் தரப்பில் பத்துப் படையினர் கொல்லப்பட்டும் 91 படையினர் (04ஆம் பக்கம் பார்க்க)

## புத்தாண்டை ஒட்டி வடக்கிற்கு நான்கு உணவுக் கப்பல்கள்

கொழும்பு,மார்ச் 26

புத்தாண்டுப் பண்டிகையை முன்னிட்டு அத்தியாவசி யப் பொருள்கள் உட்பட குடாநாட்டுக்குத் தேவையான பலவகையான பொருள்களுடனும் கப்பல் ஒன்று இன்று காங்கேசன்துறை நோக்கிப் புறப்படுகின்றது. இதுபோன்று மேலும் மூன்று கப்பல்கள் அடுத்தவாரம் குடாநாட்டுக்குச் செல்லும் என்று அறிய வந்துள்ளது.

அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் எஸ். பி. திவாரட்ண இத்தகவலை நேற்றுத் தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தமிழ் - சிங்களப் புதுவருடத்தை ஒட்டி அத்தியாவசிய உணவுப் பொருள்கள் உட்பட குடாநாட்டிற்குத் தேவையான பொருள்களுடன் நான்கு கப்பல்கள் காங்கேசன்துறை துறைமுகத்துக்கு அனுப்பிவைக்கப்படவுள்ளன. இதில் 3,000 மெற்றிக் தொன் நிறையுடைய அத்தியாவசியப் பொருள்களுடன் ஒரு கப்பல் திங்களன்று காங்கேசன்துறைமுகத்துக்குப் புறப்படுகின்றது.

இக்கப்பலில் அத்தியாவசியப் (04ஆம் பக்கம் பார்க்க)

## முகமாலை நோக்கி தொடர் ஷெல் தாக்குதல்!

உடுப்பிட்டி,மார்ச்26

வடமராட்சி கிழக்கு, முகமாலை ஆகிய பகுதிகளை நோக்கி நேற்றுக் காலை 5 மணி முதல் தொடர் ஷெல் தாக்குதல் கள் இடம்பெற்றன.

இத்தாக்குதல்கள் நேற்று இரவு வரை தொடர்ந்தன. வரணி, முள்ளி இராணுவ முகாம்களில் இருந்தே இந்தத் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டதாக அறியவந்தது.

இதேவேளை -

முகமாலையிலிருந்து நாகர்கோவில் முன்னரங்க நிலைகள் மீது நேற்றுப் பிற்பகல் 3மணி தொடக்கம் ஷெல் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டதாக தகவல் கள் தெரிவித்தன.

இத்தாக்குதலில் இயக்கச்சி கோயில் (04ஆம் பக்கம் பார்க்க)

## நகரின் மையப் பகுதியில் நேற்று மூன்று இளைஞர்கள் சுட்டுக்கொலை

யாழ்ப்பாணம்,மார்ச் 26

யாழ்ப்பாணம் நகரத்தின் மையப் பகுதியில் நேற்று நண்பகல் மூன்று இளைஞர்கள் இரண்டு வெவ்வேறு சம்பவங்களில் இனந் தெரியாத ஆயுததாரிகளால் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

ஆஸ்பத்திரி வீதியில் பழ விற்பனையில் ஈடுபட்டிருந்த ஒருவரும், மின்சார நிலைய வீதியில் குளிர்பான நிலைய உரிமையாளரும், அங்கு இருந்த ஒருவருமே கொலையுண்டனர்.

மின்சார நிலைய வீதியில் உள்ள குளிர்பான நிலையம் ஒன்றில் வைத்து அந்த நிலையத்தின் உரிமையாளரான அருள்ராஜா ஜெயந்தரூபன் (வயது 26 - காந்திஜி வீதி, கொக்குவில் மேற்கு, கொக்குவில்) என்பவரும் -

அங்கு இருந்த யோகலிங்கம் சாரங்கன் (வயது 23 - தியேட்டர் ஒழுங்கை - இணுவில்) என்பவரும் நேற்று நண்பகல் 12.45 மணியளவில் இனந்தெரியாத ஆயுததாரிகளால் சுடப்பட்டனர்.

நகரில் பழ விற்பனையில் ஈடுபடும் சூசைதாசன் டனில்ராஜ் (வயது 19 - அந்தோனியார் வீதி, (04ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 45ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



*அமரர்*

**நவரத்தினம் அருள்தீபன்**

பிறப்பு 19.05.1980 இறப்பு 11.02.2007

அருள்புரியும் அருள்தீபா!
உன் தீபச்சுடர் அணையவில்லை
என்றும் உன் நினைவுடன் வாழும்
உன் குடும்பத்தினர்

அன்னாரின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (26.03.2007) திங்கட்கிழமை காலை 7 மணிக்கு வில்லூன்றித் தீர்த்தக் கரையிலும், 45ஆம் நாள் நினைவஞ்சலி நிகழ்வு 28.03.2007 புதன்கிழமை மு.ப. 10 மணியளவில் அன்னாரின் இல்லத்திலும் நடைபெறும். அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

*ஞானவைரவர் வீதி,*
*சிறுப்பிட்டி மேற்கு,*
*நீர்வேலி.* (59040) **குடும்பத்தினர்.**

## நியமனக் கடிதங்கள் இன்று வழங்கப்படும்

யாழ்ப்பாணம், மார்ச்26

சுகாதாரத் திணைக்களத்தின் யாழ். பிராந்திய பயிற்சி நிலையத்தில் பயிற்சி பெற்ற மாணவ பொதுச் சுகாதார பரிசோதகர்கள், பொதுச் சுகாதார மருத்துவ மாதுக்கள் ஆகியோருக்கு நியமனக் கடிதங்கள் வழங்கப்படவுள்ளன.

இன்று திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு பொதுச் சுகாதார மருத்துவ மாதுக்களும் நண்பகல் 12 மணிக்கு மாணவ பொதுச் சுகாதார பரிசோதகர்களுக்கும் யாழ். பிரதி மாகாண சுகாதார திணைக்களத்தில் நியமனக் கடிதங்கள் வழங்கப்படவுள்ளன. (1-202)

## யோகர்சுவாமிகள் குருபூசை

யாழ்ப்பாணம், மார்ச்26

கொழும்புத்துறை இந்து மகா வித்தியாலய இந்துமாமன்றத்தின் ஏற்பாட்டில் எதிர்வரும் வியாழக்கிழமை வித்தியாலய பிரதான மண்டபத்தில் தவத்திரு சிவயோக சுவாமிகள் குருபூசை நிகழ்வுகள் நடைபெறவுள்ளன. (79-202)


## அபிவிருத்தி அதிர்ஷ்டம்
### உத்தியோகபூர்வ முடிவுகள்

868 சிவப்பு

வெற்றி இலக்கங்கள்

கன்னி **10 18 43 47**

23-03-2007

செல்லுபடியாகும் தொடர் இல. 5807495 - 5822712

ஜக்பொட் பரிசு ரூபா. 1,000,000/- வெல்லப்படவில்லை

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் எண்ணிக்கை | பரிசுத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 1 இலக்கம் | 335,131 | 10/- | 3,351,310/- |
| 2 இலக்கங்கள் | 30,741 | 20/- | 614,820/- |
| 1 இல. + லக்கினம் | 30,466 | 30/- | 913,980/- |
| 2 இல. + லக்கினம் | 2,815 | 100/- | 281,500/- |
| 3 இலக்கங்கள் | 830 | 500/- | 415,000/- |
| 3 இல. + லக்கினம் | 71 | 5,000/- | 355,000/- |
| 4 இலக்கங்கள் | 5 | 100,000/- | 500,000/- |
| 4 இல. + லக்கினம் | - | 1,000,000/- | - |
| மொத்தம் | | | 6,431,610/- |
| முச்சக்கர வண்டிகளின் பெறுமதி | 5 | 204,700/- | 1,023,500/- |
| வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை | 400,064 | | 7,455,110/- |

இந்த செவ்வாய்க்கிழமை சுப்பர் பரிசுத் தொகை ரூபா 1,748,300/-

தொடர் இல.4939061 க்கு பெறப்பட்ட நீல நிற டிக்கட்டுக்கள் 2007 மார்ச் 27 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை சீட்டிழுப்புக்குச் செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்குச் செல்லுபடியாகும்.

வளமான வாழ்விற்கு அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை
33, சேன் மைக்கேல் வீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு 03

அபிவிருத்தி அதிர்ஷ்டம் சீட்டிழுப்பில பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கட்டுக்களில் முச்சக்கரவண்டி வெற்றி பெறும் ஐந்து டிக்கட்டுக்களின் தொடர் இலக்கங்கள்

| | |
|---|---|
| மட்டக்களப்பு | 5807811-0-73 |
| மொனராகலை | 5812335-3-52 |
| புத்தளம் | 5814509-1-30 |
| கொழும்பு | 5821226-5-49 |
| காலி | 5820368-9-74 |


## அவசர சந்திப்பு

வெளிமாவட்ட மத்திய அரச ஊழியர் இன்று 26.03.2007 மு.ப. 9 மணிக்கு கச்சேரிக்கு அண்மையில் சந்திக்கவும்.

(59056) - குமரன்


## THE ROYAL COLLEGE OF JAFFNA

சுலபமான முறையில் ஆங்கிலத்தில் கதைக்கப்பயில By ந.விக்னேஸ்வரன் ஆச்சாரி 426(302), கே.கே.எஸ். வீதி யாழ்ப்பாணம்., பிளாக் வீதி, சங்கானை.


## தவறிவிட்டது

செல்வபுரம், உரும்பிராய் தெற்கு என்னும் முகவரியைச் சேர்ந்த பரமசிவம் கனிஸ்ரா என்பவரது தேசிய அ.அட்டை (875262149V) 06.03.2007 அன்று யாழ். போதனா வைத்தியசாலைக்கு அண்மையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் மேற்காணும் முகவரியில் ஒப்படைத்தவவும்.

## 45ஆம் நாள் நினைவஞ்சலி



*அமரர்*

**செல்லையா மயில்வாகனம்**

பிறப்பு 11.07.1954 இறப்பு 11.02.2007

அன்பின் சிகரமாய் ஆசையின் உருவமாய்
அறிவுரைகள் பல ஊட்டி அன்புடன் அரவணைத்த
எம் அப்பாவே! உம் நினைவலைகள் என்றும் எம் நெஞ்சலைகளிலே.
உம் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திப்போமாக.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

இன்று (26.03.2007) திங்கட்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

(59041)

*தகவல்:*
சிறுப்பிட்டிமேற்கு, நீர்வேலி. **மனைவி, பிள்ளைகள்.**

## கண்ணீர் அஞ்சலி



யா/தாவடி இ.த.க.பாடசாலை அதிபர் திரு. சு.சண்முககுலகுமரன் அவர்களின் அன்பு மாமி

**திருமதி சுந்தரலிங்கம் பொன்னம்மா**

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அன்னாரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

(59043) ஆசிரியர் நலன்புரிக் கழகம்.

## 5ஆம் ஆண்டு நினைவஞ்சலி



| *தோற்றம்* | *மறைவு* |
|---|---|
| 23 * 05 * 1940 | 22 * 03 * 2002 |

**அமரர் கந்தையா இராசமணி**

திதி:26.03.2007

அன்புக்கும் பண்புக்கும் உறைவிடமாய் அவனியில்
அவதரித்த எம்மணியின் நீங்காத நினைவுகளுடன்...

*24/2, பாரதி வீதி,*
*கச்சேரி கிழக்கு,*
*யாழ்ப்பாணம்.* (59007) **குடும்பத்தினர்.**

## கண்ணீர் அஞ்சலி

சரவணை கிழக்கைப் பிறப்பிடமாகவும்
நீர்கொழும்பை வசிப்பிடமாகவும்
கொண்ட *சுப்பிரமணியம் - காலஞ்சென்ற அன்னம்மா* தம்பதியரின் மகன்

**சுப்பிரமணியம் சோமசுந்தரம்**

அவர்கள் 24.03.2007 சனிக்கிழமை காலமானார். அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது கண்ணீர் அஞ்சலியைத் தெரிவித்து, அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றோம்.

*சரவணை கிழக்கு,* **க.பூத்தாச்சியும்**
*வேலணை.* (59033) **பிள்ளைகளும்.**

## 8ஆம் ஆண்டு நினைவஞ்சலி



| *அன்னை மடியில்* | *ஆண்டவன் அடியில்* |
|---|---|
| 20 - 02 - 1947 | 26 - 03 - 1999 |

**திருமதி அனற்றா இம்மனுவேல்**

எட்டி நடை பயில வைத்தாய்
எட்டு மாதம் கடந்த போது
ஏட்டில் பல்கலை பயில வைத்தாய்
எட்டும் என பட்டங்கள் பலதும்
எட்டுத் திக்கும் தேடிய போதும்
எட்டுமோ பாசமது உமக்கீடாய் பாரினிலே
எட்டாத தூரமதில் நீவிர் இன்று
எட்டாம் ஆண்டு நிறைவு தன்னில்

*நீங்கா நினைவுடன்.....*

*சில்லாலை வடக்கு,* **கணவர், பிள்ளைகள்,**
*பண்டத்தரிப்பு.* (59037) **மருமக்கள், பேரப்பிள்ளை.**

## மரண அறிவித்தல்

### *அப்பாத்துரை இராஜதுரை*

**(பொலிஸ் சேவையில் நீண்டகாலம் சேவையாற்றி ஓய்வுபெற்ற பொலிஸ் உத்தியோகத்தர் I.P.)**

சுன்னாகம், கந்தரோடையைப் பிறப்பிடமாகவும் ஸ்ரீகுணாநந்த மாவத்த கொட்டாஞ்சேனையை வசிப்பிடமாகவும் கொண்ட அப்பாத்துரை இராஜதுரை 23.03.2007 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற அப்பாத்துரை - சின்னம்மா தம்பதியரின் அன்பு மகனும் மறைந்த செல்லப்பா - நாகேஷ்வரி (மணி) தம்பதியரின் பாசமிகு மருமகனும் இராஜேஸ்வரியின் (இளைப்பாறிய திறைசேரி அலுவலர், கொழும்பு) அன்புக் கணவரும் ஸ்ரீரமணா, ஸ்ரீகேசவன், ஸ்ரீநிமலன் ஆகியோரின் அன்புத் தந்தையும் புனிதவதி, பாலச்சந்திரன் ஆகியோரின் பாசமிகு சகோதரனும் சிவனேசச்செல்வன், பொலின் கமலா ஆகியோரின் அன்பு மைத்துனரும் சந்திரகலாவின் மாமனும் தனுஷாவின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26.03.2007) திங்கட்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் மு.ப 10 மணியளவில் பொறளை கனத்தை இந்துமயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*தகவல்:*
**அ.பாலச்சந்திரன்**
*(சகோதரன் - பாதுகாப்பு உத்தியோகத்தர், யா/பல்கலைக்கழகம்)*
*தொ.பே. : 0112332693*

*42, இராசாவின் தோட்ட வீதி,*
*யாழ்ப்பாணம்.* (59045)

## மரண அறிவித்தல்

### இளையவன் செல்லர்



நாவற்குழி கிழக்கு, அம்மன் கோயில் வீதி, வேலம்பிராயைச் சேர்ந்த இளையவன் செல்லர் நேற்று (25.03.2007) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் செல்லம்மாவின் அன்புக் கணவரும் சந்திரா, செல்வராசா, மனோகரா, தேவதாஸ் (பனை அபிவிருத்திச் சபை ஊழியர்), ரதி, சுதா, சுதாகரன், சிவராசா, பாஸ்கரன் ஆகியோரின் அன்புத் தந்தையும் தம்பிப்பிள்ளை, கோபாலசிங்கம், தருமகுலசிங்கம், சிதம்பரப்பிள்ளை, தவமணி, சற்குணவதி (தாதிகள் பயிற்சிக் கல்லூரி, யாழ். போதனா வைத்தியசாலை), விஜயவனிதா, நளாயினி, சரஸ்வதி ஆகியோரின் மாமனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26.03.2007) திங்கட்கிழமை மு.ப. 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் பிணைமுருங்கை இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

அம்மன் கோயில் வீதி,
வேலம்பிராய்,
நாவற்குழி.

தகவல்:
மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

## மரண அறிவித்தல்

### *திருமதி சேனாதிராசா புவனேஸ்வரி*

உரும்பிராய் வடக்கைப் பிறப்பிடமாகவும் சண்டிலிப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சேனாதிராசா புவனேஸ்வரி 24.03.2007 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சேனாதிராசாவின் அன்பு மனைவியும் யமுனாதேவி, கெங்காதேவி, ரஞ்சினிதேவி ஆகியோரின் பாசமிகு தாயும் சிவகுமார், கந்தசாமி, பாலச்சந்திரன் ஆகியோரின் அன்பு மாமியும் பிரபாலினி, பிரசாலினி, பிரகாஷ், கோபிநீதன், கோபிலவன், மேனுயன், ஜிவிஷன், சஹிபன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (25.03.2007) ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*தகவல்:*
*சண்டிலிப்பாய் வடக்கு,* **மக்கள், மருமக்கள்,**
*சண்டிலிப்பாய்.* (59039) **பேரப்பிள்ளைகள்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொ.பே., 222 3837, 222 9933 தொ.ந.: 222 9944

# தெற்காசிய டாபூர் ஆக மாறுகிறது இலங்கை

கிரிக்கெட்டில் தென்னிலங்கை வீரர்களின் சாதனைகளும், பெறுபேறுகளும் சர்வதேச அளவில் பேசப்படுவதுபோல தென்னிலங்கை அரசியல் வீரர்களின் அராஜக ஆட்சித் திறமை குறித்தும் சர்வதேச ரீதியில் இப்போது அதிகம் பேசப்படுவதை - கவனிக்கப்படுவதை - காணமுடிகின்றது.

கிரிக்கெட்டில் இலங்கையின் நிலை - தரவரிசை - என்னவென்பது இனி உலகக் கிண்ணத்துக்கான அடுத்த சுற்று ஆட்டங்களின் பின்னர்தான் தெரிய வரும். ஆனால் வேறு சில துறைகளில் இலங்கையின் சாதனை பிய்த்து உதறிக்கொண்டு செல்வது இப்போதே தெளிவாகி விட்டது.

உலகில் ஆட்கள் காணாமற் போவோர் அதிகமாக உள்ள நாடுகளில் ஈராக்குக்கு அடுத்து இரண்டாவது இடத்தை இலங்கை பெற்றிருக்கிறது. மஹிந்தர் அரசின் கீர்த்தி மிக்க பெறுபேறு இது. தற்போது ஜெனிவாவில் நடைபெற்றுவரும் ஐ. நா. மனித உரிமைகள் கவுன்ஸிலின் நான்காவது கூட்டத் தொடரில் இந்தச் சாதனை பற்றிய தகவல் பிரஸ்தாபிக்கப்பட்டு விமர்சனத்திற்கு உள்ளாகியிருக்கின்றது.

இதேசமயம், கடந்த டிசம்பர் 8 ஆம் திகதி, ஆசிய மனித உரிமைகள் ஆணைக்குழு, மனித உரிமைகள் தினத்தை ஒட்டித் தனது வருடாந்த அறிக்கையை வெளியிட்டது. அதில், ஆசியாவில் மோசமான வன்முறைகள் இடம்பெறும் நாடு இலங்கை என்ற மகுடத்தை அது இலங்கைக்குச் சூட்டியது.

இலங்கையில் மனித உரிமைகள் மோசமாக மீறப்படுகின்றமை குறித்து பல்வேறு சர்வதேச அமைப்புகளும் இப்போது உன்னிப்பாகக் கவனித்து வருகின்றமை மட்டுமல்ல காலத்துக்குக் காலம் இவ்விடயம் தொடர்பாகத் தமது சிரத்தையை, கவலையை, ஆழ்ந்த வருத்தத்தை, விசனத்தை வெளியிடவும் அவை தவறுவதில்லை.

எனினும், சர்வதேசத்தின் இந்த நெருக்கமான கவனிப்புக் குறித்தும் அதன் விளைவாக எழக்கூடிய சிக்கல்கள் குறித்தும் இலங்கை அரசுத் தலைமை கவலையோ, கவனமோ கொண்டதாகத் தெரியவில்லை. இந்த விவகாரத்தை 'எடுத்தோம்; கவிழ்த்தோம்' என்ற பாணியில் கையாண்டு, சர்வதேச சிரத்தையை உதாசீனம் செய்து, தூக்கி வீசும் வகை யில் கருத்துக்களை வெளியிட்டுவரும் அரசுப் பேச்சாளர்களின் போக்கு அத்தகைய எண்ணப்பாட்டையே எவருக்கும் தோற்றுவிக்கும்.

ஜெனிவாவில் இடம்பெறும் ஐ. நா. மனித உரிமைகள் கவுன்ஸிலின் கூட்டத் தொடரில், இலங்கை அரசுத்தரப்பு கடும் கண்டனத்துக்கு உள்ளாவதைத் தவிர்ப்பதற்காக இடர் முகாமைத்துவ மற்றும் மனித உரிமைகள் அமைச்சர் மஹிந்த சமரசிங்க, கூட்டத் தொடர் ஆரம்பத்தில் ஒரு 'சமாளிப்பு' உரையை நிகழ்த்தியிருந்தார்.

ஆனால் அதற்குப் பதிலடியாக - மனித உரிமைகளைப் பேணும் விடயத்தில் இலங்கையின் சீரழிவை அம்பலப்படுத்தும் வகையில் - ஆசிய மனித உரிமைகள் ஆணைக்குழு, அமெரிக்காவைத் தளமாகக் கொண்டு இயங்கும் மனித உரிமைகள் கண்காணிப்பகம் மற்றும் லண்டனைத் தளமாகக் கொண்டு இயங்கும் சர்வதேச மன்னிப்புச்சபை ஆகியன கூட்டறிக்கை ஒன்றை வெளியிட்டிருக்கின்றமை இங்கு கவனிக்கத்தக்கது.

யாழ். குடாநாட்டில் வசிக்கும் பல லட்சம் மக்கள், யுத்தத்தின் நடுவில் சிக்கிச் சீரழிந்து, உயிரிழப்பதிலிருந்து தப்புவதற்கு என்ன செய்வது என்று தெரியாமல் தவிக்கிறார்கள். தரைவழிப்பாதை மூடப்பட்டதால் திறந்த வெளிச்சிறைக்குள் சிக்கிப் போயிருக்கின்றார்கள் அவர்கள்.

எப்படியேனும் யாழ். குடாநாட்டை விட்டு வெளியேற வேண்டும் என்ற தவிப்பில் பல்லாயிரக்கணக்கில் மக்கள் சிக்கியிருக்க, அப்படி வெளியேறுவதற்கு இராணுவத்தின் அனுமதி பெறப்படவேண்டும் என அரச நிர்வாகத்தினால் மக்கள் பணிக்கப்படுகின்றார்கள். இதனால் விண்ணப்பங்களைச் சமர்ப்பித்துவிட்டு பல்லாயிரக்கணக்கான மக்கள் காத்துத் தவம் கிடக்கிறார்கள் எனச் சுட்டிக்காட்டுகின்றது ஆசிய மனித உரிமைகள் கவுன்ஸில்.

மனித உரிமை மீறல்களுக்கு சட்ட நிவாரணமும் நீதியும் பெறுவதானால் உயர்நீதிமன்றத்தை அணுக வேண்டும். உயர் நீதிமன்றமோ கொழும்பில் தான் உள்ளது. இந்நிலையில் யுத்த பூமிகளில் சிக்குப்பட்டு, மனித உரிமை மீறல்களால் அவதிப்பட்டுக் கொண்டிருக்கும் அப்பாவி மக்கள் கொழும்புக்கு வருவதோ, சட்ட நிவாரணமும், நீதியும் நாடுவதோ சாத்தியமேயற்றது என்பதையும் அந்த அமைப்பு சுட்டிக்காட்டுகின்றது.

சூடானில் அரசுப் படைகளின் ஆதரவோடு இயங்கிவரும் ஆயுதக்குழுக்களின் அட்டகாசத்தால் உலகில் மோசமான மனித உரிமை மீறல் மையமாக அங்குள்ள டாபூர் பிரதேசம் மாறியுள்ளது. மாற்று இன மக்கள் பல்லாயிரக்கணக்கில் தொடர்ந்து கொல்லப்படுவதும், பாலியல் சித்திரவதைக்கு உள்ளாக்கப்படுவதும், பெண்கள் மாற்று இனக் குழு ஆயுததாரிகளால் பலவந்தமாக உடலுறவுக்கு உள்ளாக்கப்பட்டு கர்ப்பிணிகளாக்கப்படுவதும், குடியிருப்புகள், நகர்கள் கூண்டோடு எரித்து அழிக்கப்படுவதும், சர்வதேச நிவாரணநடவடிக்கைகளை நிர்மூலமாக்கும் விதத்தில் கொள்ளைகள், சூறையாடல்கள், அபகரிப்புகள், படுகொலைகள் இடம்பெறுவதும் இந்த டாபூர் பிரதேசத்தில்தான்.

சர்வதேசம் நேரடியாகச் சம்பந்தப்பட்டும் ஒன்றுமே சாதிக்க இயலாத - கையாலாகாத்தனமே - அங்கு வெளிப்பட்டு நிற்கிறது.

அதுபோல, 'தெற்காசியாவின் டாபூர்' ஆக இலங்கையும் மாறிக்கொண்டிருப்பதாக ஆசிய மனித உரிமைக் கவுன்ஸில் எச்சரித்திருக்கின்றது.

மனித உரிமை மீறல்களைப் பார்த்திருக்கும் மௌனப்போக்கு மூலம் அதை அனுமதித்து, ஊக்கமளித்து, பின்புல ஆதரவு வழங்கும் தனது போக்கை அரசுத் தலைமை மாற்றத் தவறுமானால் இலங்கையும் ஒரு டாபூராக மாறுவது தவிர்க்க முடியாததாகிவிடும் ஆபத்து உண்டு.

## உதிரிப்பாகங்கள் குறைந்த அளவிலேயே

யாழ்ப்பாணம்,மார்ச்26

போக்குவரத்துச் சபையின் வடபிராந்திய அலுவலகத்துக்கு ஒதுக்கப்பட்ட உபகரணங்களில் ஒரு தொகுதியே கப்பல் மூலம் எடுத்துவரப்பட்டுள்ளது.

சேவையில் ஈடுபடும் பஸ்களுக்கு 400 ரயர் ரியூப்புகளும் மற்றும் உதிரிப்பாகங்கள் தேவையென தலைமையகத்துக்கு வடபிராந்திய அலுவலகம் அறிவித்திருந்தது.

எனினும், 120 ரயர் - ரியூப்புகள் மட்டுமே வந்து சேர்ந்துள்ளதாகவும் -

அவை இருபது பஸ்களுக்கு மட்டுமே போதுமானவை என்றும் போக்குவரத்துச்சபை அதகாரிகள் தெரிவித்தனர்.

கிடைத்த உதிரிப் பாகங்கள் யாழ்ப்பாணம், காரைநகர், பருத்தித்துறைச் சாலைகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளன.

(அ-1-88-203)

## கணனிப்பயிற்சி நெறிக்கு விண்ணப்பிக்கலாம்

தொழில்துறைத் திணைக்களத்தின் யாழ்.மாவட்ட அலுவலகத்தின் ஒழுங்குபடுத்தலில் நடைபெற்று வரும் கணனி வன்பொருள் பயிற்சி நெறிக்கு விண்ணப்பங்கள், கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பிக்க விரும்புவோர் எதிர்வரும் 31ஆம் திகதிக்கு முன்னர் 'மாவட்ட அலுவலர், தொழில்துறைத் திணைக்களம், கச்சேரி, யாழ்ப்பாணம்' என்ற முகவரிக்கு விண்ணப்பிக்குமாறு கேட்கப்பட்டுள்ளது. (1-202)

## சேவைச் சான்றிதழ் அனுப்புமாறு கோரிக்கை

யாழ்ப்பாணம், மார்ச்26

வடக்கு மாகாண முகாமை உதவியாளர் சேவையின் வகுப்பு11 ஐச் சேர்ந்த அலுவலர்களை வகுப்பு 1க்கு தரமுயர்த்துவதற்கான பரீட்சைக்கு விண்ணப்பித்த சிலர் சேவைச் சான்றிதழைச் சமர்ப்பிக்கவில்லை என பொதுச் சேவை ஆணைக்குழு செயலாயளர் திருமதி. து. விஜயலட்சுமி தெரிவித்தார்.

சேவைச் சான்றிதழ் இணைக்காது விண்ணப்பித்தவர்களின் விவரங்களை யாழ். செயலக நிர்வாக உத்தியோகத்தரிடம் பெற்றுக் கொள்ளலாம்.

சேவைச் சான்றிதழ் அனுப்பாதவர்களை உடன் அவற்றை அனுப்புமாறு அவர் கேட்டுள்ளார்.

(அ-1)

## படகுகளை எடுத்துச் செல்ல தமிழக மீனவர் குழு கொழும்பில்

கொழும்பு, மார்ச்26

இலங்கைக் கடற்படையால் கைப்பற்றப்பட்ட தமிழக மீனவர்களின் படகுகளை இந்தியாவிற்கு மீள எடுத்துச் செல்வது குறித்துக் கண்டறிவதற்காக இந்திய மீனவர்களின் 11 பேர் அடங்கிய பிரதிநிதிகள் குழு நேற்று இலங்கை வந்துள்ளது.

இரு வருடங்களுக்கு முன்னர் மீன்பிடித்தொழிலில் ஈடுபட்டிருந்த இந்திய மீனவர்களின் 25 படகுகளை இலங்கைக் கடற்படையினர் கைப்பற்றியதுடன் மீனவர்களையும் கைது செய்தனர்.

மீனவர்கள் விசாரணைகளின் பின்னர் விடுவிக்கப்பட்டனர். ஆயினும் அவர்களின் படகுகள் இந்தியாவுக்கு அனுப்பி வைக்கப்படவில்லை எனக் குற்றஞ்சாட்டப்பட்டிருந்தது.

தடுத்து வைக்கப்பட்டுள்ள படகுகளை மீண்டும் இந்தியாவுக்கு எடுத்துச் செல்லும் நோக்கில் இந்தக் குழுவினர் இலங்கை வந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது. (1-202)

### நாளை

பங்குனி - 13
செவ்வாக்கிழமை
27.03.2007
திதி: நவமி
பிற்பகல் : 04.42
நட்சத்திரம்: புனர்பூசம்
முன்னிரவு : 09.51
சுபநேரம் : 10.44 - 12.14
ராகுகாலம் : 03.14 - 04.44

# கடத்தல், கொலைகளை நிறுத்த சமூகப் பெரியோர் குரல் கொடுக்கவேண்டும்

## தமிழ் மாணவர் ஒன்றியம் கோரிக்கை

யாழ்ப்பாணம், மார்ச் 26

குடாநாட்டில் மாணவர்கள் மற்றும் பொது மக்கள் கடத்தப்படும் போது கல்வி அதிகாரிகளும் சமூகப் பெரியோர்களும் அவற்றுக்கு எதிராக குரல் எழுப்புவதில்லை. இந்த மௌனம் அராஜகச் செயல்களுக்கு மேலும் ஊக்கமும் உந்துதலும் அளிப்பதாக அமைகிறது.

-இவ்வாறு தமிழ் மாணவர் ஒன்றியம் கவலை வெளியிட்டுள்ளது.

குடாநாட்டில் தொடரும் கடத்தல்கள், கொலைகள் ஆகியவற்றை முடிவுக்கு கொண்டுவர குடாநாட்டில் பணிபுரியும் பொறுப்பு வாய்ந்தவர்கள் அச்சம் தவிர்த்து குரல் கொடுக்கவேண்டும் என்றும் அந்த அமைப்பு தனது அறிக்கை ஒன்றில் கேட்டுள்ளது.

கடத்தல்களை மூடி மறைப்பதற்கு அரசு பொய்ப்பிரசாரங்களை மேற்கொண்டு வருவதாகவும் அறிக்கையில் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

கடத்தப்பட்ட மாணவர்கள் விடுவிக்கப்பட வேண்டும் என்று கேட்டுள்ள தமிழ் மாணவர் ஒன்றியம் கொலைகளையும், கடத்தல்களையும் நிறுத்துமாறு படையினரைக் கேட்டுள்ளது.

(அ-1)

## நகர உணவகங்கள் சிலவற்றில் சுத்தமற்ற குடிதண்ணீர் பாவனையில்

யாழ்ப்பாணம், மார்ச்26

யாழ். நகரப் பகுதியில் உள்ள சில உணவகங்களில் சுத்தமற்ற குடி தண்ணீர் பாவனையில் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

யாழ்.பிராந்திய மலேரியா தடை இயக்கப் பொறுப்பதிகாரி டாக்டர் கே.ரி.சிவபாதம் இத்தகவலை உதயனுக்குத் தெரிவித்துள்ளார்.

இச்சீர்கேடு தொடர்பாக முறைப்பாடுகள் பல கிடைத்துள்ளன.

இதனையடுத்து குறிப்பிட்ட உணவகங்களுக்குத் தண்ணீர் பெறப்படும் கிணறுகளில் இருந்து நீர் மாதிரிகள் எடுக்கப்பட்டு ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. அதனையடுத்தே சுத்தமற்ற குடிதண்ணீர் பயன்படுத்தப்படுவது கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (அ-203-51)

# யாழ்ப்பாணத்திலிருந்து விமானம் மூலம் 44நோயாளர்கள் கொழும்புக்கு

## ஐ.சி.ஆர்.சி. உதவியுடன்

யாழ்ப்பாணம், மார்ச் 26

விசேட மருத்துவ சேவை தேவைப்பட்ட யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த 44 நோயாளர்களதும் அவரது உதவியாளர்கள் 35பேரும் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவினால் விமான மூலம் கொழும்புக்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.

செஞ்சிலுவைக் குழுவின் ஆகப் பிந்திய செய்தி அறிக்கையில் இத்தகவல் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

17 வைத்தியர்களுக்கும் விமானப் போக்குவரத்துச் சேவை வசதிகள் வழங்கப்பட்டன. ஆய்வு கூட பரிசோதனைக்காக மாதிரிகளும் இவ்விமானச் சேவை மூலம் கொண்டு செல்லப்பட்டன. சுகாதார அமைச்சினால் யாழ்.போதனா வைத்தியசாலைக்கும் மற்றைய சுகாதார சேவைகளுக்கும் வழங்கப்பட்ட மருந்துகள் மற்றம் மருத்துவப் பொருள்களும் இச்சேவை மூலம் கொழும்பிலிருந்து கொண்டு வரப்பட்டு கையளிக்கப்பட்டன. நன்கொடையாக 440 ஊசி மருந்துகளும் வைத்தியசாலைச் சத்திர சிகிச்சைப் பிரிவுக்கு வழங்கப்பட்டன. மேலும் யாழ்ப்பாணம் மற்றும் மட்டக்களப்பு மாவட்டங்களில் இரவு நேர அம்புலன்ஸ் வண்டி சேவையை சர்வதேச செஞ்சிலுவைக் குழு தொடர்ந்து நடத்தி வருகிறது. ஐ.சி.ஆர்.சி சுகாதார சேவை அதிகாரிகளுக்கு தொடர்ந்தும் வடக்கு கிழக்கு பிரதேசங்களில் உதவி வருகிறது - என்று அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

### நோயாளரை படையினர் கொழும்புக்கு அனுப்பினர்

யாழ். போதனா வைத்திய சாலையில் இருந்து இரண்டு அவசர நோயாளர்களை மேலதிக சிகிச்சைக்காகப் படையினர் கொழும்புக்கு விமானம் மூலம் அழைத்துச் சென்றதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவசர சிகிச்சை மேற்கொள்ளப்படவேண்டியிருந்த ஆசீர்வாதம் யேசுராசா (வயது 54), தில்லைநாதன் யுகப்பிரியா (வயது 25) ஆகிய இருவருமே விமானம் மூலம் அழைத்துச் செல்லப்பட்டுள்ளனர்.

இவர்களுக்கு இலவச பயண ஏற்பாடுகள் செய்து கொடுக்கப்பட்டன என்று பலாலி படைத் தலைமையகம் விடுத்த செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-203)

## வடமராட்சியின் சில பகுதிகளில் மீன்பிடிக்க அனுமதியில்லை

வடமராட்சியில் பொலிகண்டி, திக்கம், சக்கோட்டை ஆகிய பிரதேச கடலில் மீன்பிடிப்பதற்கு நேற்று அனுமதி மறுக்கப்பட்டதாக மீனவர்கள் தெரிவித்தனர்.

ஏனைய இடங்களில் மீன்பிடிப்பதற்கு அனுமதிக்கப்பட்டது.

(அ-1-155)

## தொழிற்சங்க பிரதிநிதிகளுக்கு தொடர்ந்து தடுப்புக் காவல்

தமிழீழ விடுதலைப் புலிகளுடன் தொடர்புகளை வைத்திருந்தனர் என்ற சந்தேகத்தின் பேரில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தென்னிலங்கையைச் சேர்ந்த மூவரையும் தொடர்ந்து தடுப்புக்காவலில் வைத்து விசாரணைகளை மேற்கொள்ள கொழும்பு நீதிவான் அனுமதி வழங்கியுள்ளார்.

இதன் பிரகாரம் அடுத்த மாதம் 23ஆம் திகதி வரை இம்மூவரும் தடுப்புக்காவலில் வைக்கப்படுவர்.

பயங்கரவாதத் தடுப்புப் பிரிவு [illegible] தது. இவர்களில் தொழிற்சங்கவாதிகள் மூவரும் அடங்குவர்.

## குடாநாட்டின் குட்டிச் செய்திகள் - யாழ்ப்பாணம்

### நெடுந்தீவுக்கு மின்பிறப்பாக்கி

நெடுந்தீவு, மார்ச்26

நெடுந்தீவுக்கு மின் விநியோகம் வழங்கும் பொருட்டு 250 மெகாவாட்ஸ் வலுவுள்ள மின் பிறப்பாக்கி புதிதாக எடுத்துவரப்படவுள்ளது.

புங்குடுதீவு கடற்படைப் பொறுப்பதிகாரி ஹேமந்த பீரிஸ் இதற்கான ஏற்பாடுகளைச் செய்துள்ளார்.

இந்தமின்பிறப்பாக்கியை நெடுந்தீவில் இறக்குவதற்கு விசேட ஏற்பாடுகள் தொடர்பாக அவர் நேரில் ஆராய்ந்துள்ளார்.

கடந்த ஒரு மாதத்துக்கு மேலாக நெடுந்தீவுக்கான மின் விநியோகம் பாதிக்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது. (அ-1-111)

### தொழில்நுட்பவியல் நிறுவனமாகத் தரமுயர்வு

யாழ்ப்பாணம், மார்ச்26

யாழ். தொழில்நுட்பக் கல்லூரி, கொரிய அரசின் நிதியுதவி மற்றும் நவீன தொழில்நுட்ப உதவியுடன் தொழில்நுட்பவியல் கல்வி நிறுவனமாகத் தரமுயர்த்தப்பட்டுள்ளது.

இந்த நிறுவனத்திற்கான புதிய கட்டடங்களை நிர்மாணிக்கும் வேலைத் திட்டத்தின் ஆரம்பவிழா கடந்த வியாழக்கிழமை நடைபெற்றது.

நிகழ்வில் பிரதமகுரு தேவசிவாகம ஞானபானு பிரம்மஸ்ரீ சோமசுந்தரக் குருக்களின் யாகபூசையைத் தொடர்ந்து கல்லூரியின் அதிபரும் பிரதிப் பிராந்தியப் பணிப்பாளருமாகிய ந. யோகராஜன் அடிக்கல் நட்டுவைத்தார்.

இக்கல்லூரி மிக விரைவில் தொழில்நுட்பப் பல்கலைக்கழகமாகத் தரமுயர்த்தப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (1-202)

### நெடுந்தீவுப் படகுச் சேவை; மக்கள் சிரமம்

யாழ்ப்பாணம்,மார்ச்26

நெடுந்தீவு - குறிக்காட்டுவான் இடையே நடத்தப்படும் குமுதினி அரச படகுச் சேவை நாளாந்தம் ஒரு தடவை மட்டுமே நடத்தப்படுகின்றது. அதனால் பயணிகள் பெரும் சிரமங்களை எதிர்கொள்கின்றனர்.

இச்சேவையை தினசரி 2 தடவைகள் நடத்த சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என பயணிகள் தரப்பில் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அசாதாரண சூழ்நிலைகாரணமாகவும் எரிபொருள் தட்டுப்பாடு காரணமாகவும் படகுச் சேவை தினசரி ஒன்றாகக் குறைக்கப்பட்டது. தற்போது எரிபொருள் போதியளவு கிடைக்கின்ற நிலையில் படகுச் சேவையை மீள அதிகரித்து நடத்துவதற்கு அதிகாரிகள் ஆவன செய்யவேண்டும் என்றும் பொது மக்கள் தரப்பில் எதிர்பார்க்கப்படுகிறது.(அ-202-111)

## ICC Cricket World Cup West Indies 2007 — உலகக் கிண்ணக் கிரிக்கெட் போட்டி 2007

### ஆஸ்திரேலியா, இங்கிலாந்து வெற்றி

உலகக் கிண்ணப் போட்டித் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டங்களில் ஆஸ்திரேலியா, இங்கிலாந்து அணிகள் வெற்றிபெற்றன.

ஆஸ்திரேலியா - தென்னாபிரிக்கா அணிகளுக்கிடையிலான ஆட்டத்தில் ஆஸ்திரேலியா 83 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய ஆஸ்திரேலியா 50 ஓவர்களில் 6 விக்கெட்டுகளை இழந்து 377 ஓட்டங்களை எடுத்தது.

இப்போட்டியில் எடுத்த 92 ஓட்டங்களுடன் பொண்டிங் ஒரு நாள் போட்டிகளில் 10 ஆயிரம் ஓட்டங்களைக் கடந்தார். ஹெய்டன் 102 ஓட்டங்களையும் கிளார்க் 92 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய தென் ஆபிரிக்கா அணி 48 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 294 ஓட்டங்களைப் பெற்றது. வில்லீர்ஸ் 92 ஓட்டங்களைப் பெற்றார்.

மற்றுமொரு ஆட்டத்தில் 7 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் இங்கிலாந்து அணி கென்யாவை வென்று 'சுப்பர்-8' சுற்றுக்குத் தெரிவாகியுள்ளது.

முதலில் துடுப்பெடுத்தாடிய கென்யா அணி 43 ஆவது ஓவரில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 177 ஓட்டங்களைப்பெற்றது.

வெற்றி இலக்காக 178 ஓட்டங்கள் நிர்ணயிக்கப்பட்டது. இந்த இலக்கை 3 விக்கெட்டுக்களை மட்டும் இழந்து 33 ஓவர்களில் இங்கிலாந்து அணி அடைந்தது. இதில் ஜோய்ச் 75 ஓட்டங்களையும் பெற்ற[illegible]ன் 56 ஓட்டங்களையும் அணிக்காகப் பெற்றுக் கொடுத்தனர். (அ-1-202)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## போர் அகதிகளைப்... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பாதுகாப்பாக வாழவும், மனிதாபிமான உதவிகளை உரியவாறு பெற்று நிரந்தரமான வாழ்வை அமைக்கவும் ஐ.நா. தலையிட்டு நடவடிக்கை எடுக்கவேண்டும் -

மனித கேடயங்களாக தமிழ் மக்கள் பயன்படுத்தப்படுவதை தடுத்து நிறுத்த வேண்டும் - என்பன உட்பட்ட கோரிக்கைகளை ஐ.நாவிடம் தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பு வலியுறுத்தவிருக்கிறது.

இந்த விடயத்தில் இந்தியா முன்னின்று ஆதரவும் அனுசரணையும் ஐ.நா. ஊடாக வழங்கி நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று இந்தியத் தூதரிடம் தாம் கேட்டிருப்பதாக கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா உதயனுக்குத் தெரிவித்தார்.

அரசின் நடவடிக்கைகள் காரணமாக அகதிகள் நிலை மிக மோசமடையும். எனவே ஐ.நா. தலையிட இந்தியா பங்களிப்பை வழங்க வேண்டும் என்று இந்தி யத் தூதரிடம் கேட்டோம்.

தெற்காசிய பிராந்திய ஒத்துழைப்பு மன்றத்தின் உச்சி மாநாடு புதுடில்லியில் இம்மாதம் 30 ஆம் திகதி ஆரம்பமாக உள்ளது. அதனை ஒட்டிப் புதுடில்லி சென்றிருக்கும் இந்தியத் தூதுவர் அலோக் பிரசாத், இது விடயத்தை தமது நாட்டு அரசுக்குத் தெரியப்படுத்துவதாகவும் கூட்டமைப்பு எம்.பிக்களுக்கு உறுதி அளித்தார் என்று அவர் தெரிவித்தார்.

இதேவேளை -

அகதிகளுக்கான ஐ.நா. தூதரகத்தின் கொழும்புக்கான வதிவிடப் பிரதிநிதியிடமும் தமிழ் அகதிகளின் பாதுகாப்பு, அவர்களுக்கான மனிதாபிமான மறுவாழ்வு உதவிகள் குறித்தும் கூட்டமைப்பு கலந்துரையாட உள்ளது.

இச்சந்திப்பு நாளை செவ்வாய்க்கிழமை இடம்பெறவுள்ளது. அப்போது தமிழ் அகதிகளின் பாதுகாப்பு விடயத்தில் ஐ.நா.தலையிட்டு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பது குறித்தே பிரதானமாக எடுத்துரைக்கப்படும் என்றும் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா மேலும் தெரிவித்தார். (அ-1)

## புத்தாண்டை... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பொருள்கள் உட்பட உடுதுணி வகைகள், அழகு சாதனப் பொருள்கள் என்பனவும் அனுப்பி வைக்கப்படுகின்றன.

தனியார் வர்த்தகர்கள் குடாநாட்டுக்கு அனுப்பிவைக்கும் பொருள்களின் விலைகள் குறித்து அவர்களோடு பேச்சு நடத்திக் குறைந்த விலையில் அதாவது தெற்கில் விற்கப்படும் விலைகள் நிர்ணயிக்கப்பட்டு விற்பனைக்கு விடப்படும்.

யாழ். குடாநாட்டில் தற்போது அத்தியாவசிய உணவுப் பொருள்களுக்கு எதுவித தட்டுப்பாடும் நிலவவில்லை. அங்கு தாராளமாகப் பொருள்கள் கிடைக்கின்றன. மேலும் 6,000 மெற்றிக் தொன் பொருள்களுடன் மூன்று கப்பல்கள் அடுத்தவாரம் அங்கு அனுப்பி வைக்கப்படும் என்று அத்தியாவசிய சேவைகள் நாயகம் விவரம் வெளியிட்டார்.


### அருள்வளர் ஸ்ரீ சுந்தர ஆஞ்சனேயர் கோயில்
இணுவில் - மருதனார்மடம்

**ஸ்ரீ ராமநவமியும், பஞ்சரத்தினக் கீர்த்தனை ஆராதனையும்**

**27.03.2007 செவ்வாய்க்கிழமை**

காலை 8 மணி - சங்கற்பம்

8.30 - 10.30 மணி வரை -

கலைஞர்களின் பஞ்சரத்தினக் கீர்த்தனை ஆராதனையுடன்

திரவிய அபிஷேகம்

நவகலச அபிஷேகம்

விசேட பூஜை நடைபெறும்

நண்பகல் 12 மணி மகேஸ்வர பூஜை (அன்னதானம்)

குறிப்பு: திருமதி ஞானகுமாரி சிவனேசன் அவர்களின் அனுசரணையுடன் பஞ்சரத்தினக் கீர்த்தனை ஆராதனை நடைபெறும். சகல கலைஞர்களும் பங்குபற்றி ஸ்ரீ ராமரின் அருள் பெற்றுய்யுமாறு வேண்டுகின்றோம்.

ஓம் ராம! ஸ்ரீராம!! ஜெயராம!!! ஓம்!

சிவஸ்ரீ இ.சுந்தரேஸ்வரக் குருக்கள்.
ஆதீனகர்த்தாவும் சிவாச்சாரியாரும்.

(59038)



## பிறந்தநாள் வாழ்த்துகள்

**26.03.2007**

HAPPY BIRTHDAY

யாழ்ப்பாணம், வண்ணார்பண்ணை, முருகமூர்த்தி வீதியைச் சேர்ந்த சுகந்தன் - சிவாஜினி தம்பதியரின் செல்வப்புதல்வர்கள்

4 ஆவது **பவித்திரன்**

முதலாவது **வைஸ்ணவி**

தமது பிறந்தநாளை இன்று (26.03.2007) திங்கட்கிழமை தமது இல்லத்தில் வெகுவிமரிசையாகக் கொண்டாடுகிறார்கள். இவர்களை சீரும் சிறப்பும் பெற்று நாகபூஷணி அம்மன் கிருபையால் நீடூழி வாழ்கவென வாழ்த்துகிறோம்.

47/1, முருகமூர்த்தி வீதி,
வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.

வாழ்த்துவோர்: தாத்தா - பிரபா குடும்பத்தினர்,
அப்பப்பா - செல்வராசா குடும்பத்தினர். (59004)



## திருமண அழைப்பு

சிரஞ்சீவி
**சிவசங்கரசர்மா**
(மயிலணி, ஸ்ரீ முத்துமாரி அம்மன் கோயில்
ஆசிரியர், யா/ சாவகச்சேரி இந்துக் கல்லூரி)

சௌபாக்கியவதி
**கானப்பிரியா**
(ஆசிரியை, யா/ கைதடி முத்துக்குமாரசாமி ம.வி.)

**முகூர்த்தம்** : 28.03.2007 புதன் (பங்குனி 14ஆம் நாள்)
மு.ப. 9.26 – 11.02 மணிவரை

**இடம்** : கோப்பாய் தெற்கு, ஸ்ரீ வீரபத்திரஸ்வாமி
கோயில் மண்டபம்.

**வரவேற்பு உபசாரம்** : 29.03.2007 வியாழன் மாலை
3 மணிமுதல் மணமகன் இல்லத்தில் நடைபெறும்.

ஸ்ரீமதி லலிதாம்பாள் நாகேஸ்வரசர்மா
மயிலணி, சுன்னாகம்.

சிவஸ்ரீ சி.ஜோதீந்திரக்குருக்கள்
- ஞானபூங்கோதை
கோப்பாய் தெற்கு, கோப்பாய்.

(59001)


## கட்டுநாயக்கா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அருகில் உள்ள சர்வதேச விமான நிலையம் இன்று காலை 8.30 மணிவரை மூடப்பட்டது. வேறு நாடுகளில் இருந்து வந்தடைய வேண்டிய பயணிகள் விமானங்கள் இந்தியா, துபாய், அபுதாபி, ஆகிய நாடுகளுக்கு வழிமாற்றப்பட்டன.

இலங்கையின் போர் வரலாற்றில் அரசு விமானப் படை மீது விடுதலைப் புலிகள் வான் தாக்குதல் நடத்தியது இதுவே முதல் தடவையாகும்.

இத்தாக்குதல் புதிய அத்தியாயம் ஒன்றைத் தொடக்கி வைத்திருப்பதாக இராணுவ ஆய்வாளர் இக்பால் அத்தாஸ் இன்று அதிகாலை உதயனுக்குத் தெரிவித்தார்.

விடுதலைப் புலிகளின் விமானங்கள் விமானத் தளத்தின் மீது பறந்ததை அவதானித்ததும் அங்குள்ள பிரதான கட்டமைப்புகள் தெரியாதவாறு வெளிச்சத்தை அணைத்துவிட்டதாக அரச தரப்பில் தகவல் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை - நேற்றைய நள்ளிரவுத் தாக்குதல்கள் போன்று இனிமேலும் தாக்குதல்கள் தொடரும் என்றும் -

இது ஒரு பரீட்சார்த்த தாக்குதல் என்பது மட்டுமன்றி,தமிழ் பொதுமக்களை இலங்கைப் படைகளின் வான் தாக்குதல்களிலிருந்து பாதுகாப்பதற்கான நடவடிக்கை என்றும் - இளந்திரையன் ரொய்ட்டருக்கு இன்று அதிகாலை வழங்கிய பேட்டியில் தெரிவித்தார்.

வடமுனைப் போர் நிலைகளின் மீது அரசபடைகள் தீவிர தாக்குதல்களை இன்னும் சில வாரங்களில் தொடங்க இருப்பதாக வெளியான ஊகங்களின் மத்தியில் விடுதலைப் புலிகளின் வான் தாக்குதல் நடைபெற்றிருப்பது பல மாற்றங்களையும் விளைவுகளையும் உண்டாக்கலாம் என்று ஆய்வாளர்களும் செய்தி ஏஜென்ஸிகளும் தெரிவித்துள்ளன. (அ-1)

## கடும் ஷெல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

காயமடைந்தும் உள்ளனர் என்றும் இராணுவம் தெரிவித்துள்ளது. காயமடைந்த படையினரில் 46 பேர் பலத்த காயங்களுக்கு இலக்காகி உள்ளனர் என்றும் மேலும் தெரிவிக்கப்பட்டது.

மோதல் நடைபெறும் பெரியதம்பனை, பண்டிவிரிச்சான் கிராமங்களை அண்டி வாழ்ந்த சுமார் 300 பேர் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை முன்னணி இராணுவப் பாதுகாப்பு நிலைகள் வழியாக அரசுக் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தினுள் வந்துசேர்ந்துள்ளனர் என்று கூறப்படுகிறது. ஆயிரக்கணக்கான பொதுமக்கள் மடு தேவாலயப் பகுதியில் தஞ்சமடைந்திருக்கின்றனர். (அ-சி)

## முகமாலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வயல் பகுதியில் உள்ள பிள்ளையார் ஆலயமும் வைரவர் ஆலயமும் தகர்ந்துள்ளன என்றும் - பச்சிலைப்பள்ளி பிரதேச பதிவாளர் செயலகமும் பலத்த சேதங்களுக்கு உள்ளாகியிருந்தது என்றும் - இணையத்தளச் செய்திகள் தெரிவித்தன. (அ-1-155-115)

## நகரின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பெரியவிளான், இளவாலை) என்பவர் ஆஸ்பத்திரி வீதியில் வைத்து நண்பகல் 12.50 மணியளவில் சுட்டுக் கொல்லப்பட்டார்.

வைரவர் கோயிலுக்கு சமீபமாக ப[illegible] வியாபாரத்தில் அவர் ஈடுபட்டிருந்தவேளை, ஆயுததாரிகள் அங்கு வைத்து இவரைவிசாரித்தனர் என்றும் -

அவர்தப்பி ஓடிய சமயம் துரத்திச் சென்று ஆஸ்பத்திரி வீதியில் வைத்து சுட்டு விட்டுத் தப்பிச் சென்றனர் என்றும் - மரண விசாரணையின் போது தெரிவிக்கப்பட்டது.

யாழ்.நீதிவான் இ.த. விக்னராஜா மரண விசாரணைகளை நடத்தினார்.

சடலங்களை பிரேதபரிசோதனையின் பின் உறவினர்களிடம் ஒப்படைக்கும்படி நீதிவான் உத்தரவிட்டார். (அ-1-15-78-202)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி நடராசா அன்னம்மா



தொட்டிலடி, சங்கானையைச் சேர்ந்த திருமதி நடராசா அன்னம்மா நேற்று (25.03.2007) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நடராசாவின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற பொன்னையாவின் அன்புச் சகோதரியும் மகேஸ்வரி, வைரவநாதன், பரமேஸ்வரி, செல்வலிங்கம் (கனடா), நாகேஸ்வரி (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தாயும் புவனேந்திரன், விமலாதேவி, நடராசா, யசோதா, சுகுணசபேசன் ஆகியோரின் அன்பு மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26.03.2007) திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக விளாவெளி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொட்டிலடி,
சங்கானை.
(59050)

தகவல்:
குடும்பத்தினர்.

### திருமதி பீதாம்பரம் சிவயோகம்மா

நல்லூர் வடக்கு, கலைமகள் வீதி, சந்திரசேகரப்பிள்ளையார் கோயிலடியை பிறப்பிடமாகவும் திருகோணமலையை வதிவிடமாகவும் கொண்ட பீதாம்பரம் சிவயோகம்மா காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற அதிபர் பீதாம்பரத்தின் அன்பு மனைவியும் கனகரத்தினம் - வள்ளிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும் சந்திரசேகரியின் (முன்னாள் பிரதம லிகிதர், கச்சேரி - UK) சகோதரியும் மல்லிகாதேவி (வட மாகாண திறைசேரி, திருமலை), பத்மராணி (பிரதம லிகிதர் - பிரதேச செயலகம், திருகோணமலை) ஆகியோரின் அன்புத் தாயும் முருகதாஸ் (UK), கருணாகரன் (சுவிஸ்), வதனி (UK) ஆகியோரின் மாமியும் பராசக்தியின் (முன்னாள் ஆசிரிய ஆலோசகர்) பாசமிகு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 25.03.2007 ஞாயிற்றுக்கிழமை 21, புனித அந்தோனியார் வீதி திருமலையிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று திருமலை இந்து மயானத்தில் பூதவுடல் தகனஞ் செய்யப்பட்டது. இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

21, புனித அந்தோனியார் வீதி,
திருமலை. (0779212511)
இணுவில். (222 0991)

தகவல்:
திருமதி சந்திரசேகரி.

### ஆறுமுகம் ஆனந்தராசா (ஆசாரி)



மாதகலைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட ஆறுமுகம் ஆனந்தராசா (ஆசாரி) நேற்று (25.03.2007) ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் - சிவபாக்கியம் தம்பதியரின் அருமை மகனும் மயில்வாகனம் - காலஞ்சென்ற நல்லம்மா தம்பதியரின் மருமகனும் பரமேஸ்வரியின் அன்புக் கணவரும் கலைச்செல்வியின் பாசமிகு தந்தையும் காலஞ்சென்ற சிவானந்தத்தின் அருமைச் சகோதரரும், திருவருட்செல்வியின் சிறியதந்தையும் கமலாம்பிகை, கந்தசாமி, அமரர் இலட்சுமிப்பிள்ளை மற்றும் இராஜேஸ்வரி, இரட்ணேஸ்வரி, யோகேஸ்வரி, மங்களேஸ்வரி, சிவகுமார், றாஜ்குமார், சந்திரகுமார் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று(26.03.2007) திங்கட்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று நண்பகல் 12மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக மாதகல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அந்தோனியார் வீதி, மாதகல்.

தகவல்:
குடும்பத்தினர்.

### பொன்னுத்துரை சுந்தரலிங்கம்

அளவெட்டியைப் பிறப்பிடமாகவும் கட்டுடையை வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னுத்துரை சுந்தரலிங்கம் நேற்று (25.03.2007) ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் தில்லையீஸ்வரியின் அன்புக் கணவரும் ரூபேந்திரன், காண்டீபன் (கண்ணன், கண்ணன் ஸ்ரோர்ஸ், கட்டுடைச்சந்தி), நிமலன்(பிரான்ஸ்), பகீரதன் ஆகியோரின் அன்புத் தந்தையும் ஸ்ரீபாமாவின் மாமனாரும் தர்ஷாவின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (26.03.2007) திங்கட்கிழமை தகனக்கிரியைக்காக பிப்பிலி இந்து மயானத்துக்கு பிற்பகல் 2.30 மணிக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: **கண்ணன் (மகன்)**
**(கண்ணன் கடை, கட்டுடைச்சந்தி, மானிப்பாய்).**

### பொன்னம்பலம் இராசநாயகம்

**(ஓய்வுபெற்ற விரிவுரையாளர், யாழ்.தொழில் நுட்பக் கல்லூரி)**



நவாலி வடக்கு, ஆண்டார் வளவை பிறப்பிடமாகவும் திருநெல்வேலியை வதிவிடமாகவும் தற்போது வெள்ளவத்தையில் வசித்து வந்தவருமாகிய பொன்னம்பலம் இராசநாயகம் நேற்று (25.03.2007) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை பொன்னம்பலம்-தெய்வநாயகத்தின் மகனும், நாவலலையைச் சேர்ந்த சுயம்புலிங்கநாதனின் (P.S.L.Nathan) தம்பியும் காலஞ்சென்றவர்களான சின்னையா கதிரிப்பிள்ளை (தாமர்) - சின்னத்தங்கச்சி, கணபதிப்பிள்ளை சிவப்பிரகாசம் - தங்கம்மா ஆகியோரின் மருமகனும் வசாவிளானைச் சேர்ந்த காலஞ்சென்ற ஆசிரியை வள்ளியம்மை,முல்லைத்தீவைச் சேர்ந்த ஞானாம்பிகை ஆகியோரின் கணவரும் சந்திரகுப்தா (தேவன்-குப்தா, ஆஸ்திரேலியா), ரவீந்திரன் (ரவி - லண்டன்), ரவிக்குமார் (குமார்-லண்டன்) ஆகியோரின் தந்தையும் பிரபாலினி (ஆஸ்திரேலியா), மேரி ஜஸ்லீன் (சூட்டி - லண்டன்), பிரமிளா (லண்டன்) ஆகியோரின் மாமனும் தக்சினி ஜோன்சன், வேள்றாம்குப்தா (ஆஸ்திரேலியா), பிரியந்தினி, கிருசாந்தன், அஸ்வின், அருண் ஆகியோரின் பேரனும் காலஞ்சென்ற ஜேய்கப் தில்சான் யோன்சனின் பூட்டனும் வசாவிளானைச் சேர்ந்த ஓய்வுபெற்ற Dr.கதிரிப்பிள்ளை சிவலிங்கம் (கனடா), திருமதி இராசரட்ணம் சிவக்கொழுந்து (ஆஸ்திரேலியா), திருமதி உடையார் பரமேஸ்வரி (கொழும்பு), முல்லைத்தீவைச் சேர்ந்த காலஞ்சென்ற செல்லத்துரை திலகவதி, காசிப்பிள்ளை சரஸ்வதி, சிவராமலிங்கம், இராஜலிங்கம் கணேஸ்வரி, சிவசுப்பிரமணியம் ஜெயலெட்சுமி, காலஞ்சென்ற சிவப்பிரகாசம் மங்கையர்க்கரசி, திருநாவுக்கரசு தனலெட்சுமி, சரவணபவானந்தன், கருணாகரன் மங்களேஸ்வரி (கனடா), இரத்தினானந்தன் (அமெரிக்கா) ஆகியோரின் அன்பு மைத்துனருமாவார்.

அன்னாரின் பூதவுடல் கல்கிசை மகிந்த மலர்ச் சாலையில் (591, காலி வீதி, கல்கிசையில்) 27.03.2007 செவ்வாய்க்கிழமை காலை 8 மணி தொடக்கம் பி.ப. 4 மணி வரை அஞ்சலிக்காக வைக்கப்பட்டு, பின்னர் பூதவுடல் கல்கிசை மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

Seagul Apartment
29, 1/2, Rohini Road,
Wellawatte, Colombo - 06.
T.P. 2596539/ 2505099.

தகவல்:
மனைவி, பிள்ளைகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 26.03.2007இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.